சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M.முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

**<u>அசல் வழக்கு எண்.22/2021</u>**

பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.2 ன் வாக்குமூலம் 1875 ம் ஆண்டில் 10 வது பிரிவின் கீழ் விசாரிக்கப்பட்டு திருமதி. B. மகாலெட்சுமி, பெஞ்ச் கிளார்க் நிலை 2 என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் வாங்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர்: | திரு. சூர்யராஜகுமாரன் | த/பெ: சுவாமிநாதன் |
| வயது: | | ஊர் : |
| தொழில்: | | முகவரி: |
| தேதி: | 10.04.2026 | தாலுக்கா: |

<u>முதல் விசாரணை…</u>

நான் தற்போது திருவாரூர் கனரா வங்கியில் கிளை மேலாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததன் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். நான் திருவாரூர் கனரா வங்கியில் 22.05.2023 லிருந்து மேலாளராக பணியாற்றிவருகிறேன். சிண்டிகேட் வங்கி எங்கள் வங்கியுடன் 01.04.2020 ல் இணைக்கப்பட்டது. சிண்டிகேட் வங்கியில் சாந்தகுமார் என்பவர் வைத்திருந்த கணக்கு எண் 63802200003148 ஆகும். சாந்தகுமார் எப்போது வங்கி கணக்கு ஆரம்பித்தார் என்பதற்கான ஆவணம் எடுத்துவரவில்லை. சாந்தகுமார் பெயருக்கு காசோலை எண்.879097 என்ற எண் கொண்ட காசோலை சிண்டிகேட் வங்கியால் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி காசோலையை வங்கியிலிருந்து சாந்தகுமார் 22.04.2015 ல் வாங்கியுள்ளார். சிண்டிகேட் வங்கி எங்கள் வங்கியுடன் இணைக்கப்பட்ட போது வாடிக்கையாளர்களுக்கு தகவல் கொடுத்தோம். சாந்தகுமாருக்கு SMS. Whatsapp போன்ற வகைகளில் அனுப்பியுள்ளோம். சாந்தகுமார் பெயருக்கு காசோலை எண்.879097 கொண்ட காசோலை வங்கியில் பணமாக்க வந்தால் பணமாக்க வேண்டாம் என்று கடிதம் கொடுத்துள்ளாரா என்றால் எனக்கு வந்த சம்மனில் மேற்சொன்ன விவரம் குறித்து தெரிவிக்கப்படாததால் அதற்கான ஆவணம் எடுத்துவரவில்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணம் சிண்டிகேட் வங்கியால் காசோலைக்காக கொடுக்கப்பட்டது. காசோலை எண்.879097 ஐ 30.10.2020 ல் எங்கள் வங்கியில் பணமாக்க செலுத்தப்பட்டுள்ளதா இல்லையா என்பதற்கான ஆவணம் எடுத்துவரவில்லை.

**குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்திலிருந்து எனக்கு அனுப்பப்பட்ட சம்மனில் யாருடைய வங்கி கணக்கு என்பதற்கான பெயர் விவரமும் வங்கி கணக்கு பெயர் விவரமும் தெரிவிக்கப்படவில்லை என்றால் சரிதான். என்ன என்ன ஆவணங்களை எடுத்துவரவேண்டும்என்று சம்மனில் தெரிவித்திருந்தால் மட்டுமே என்னால் எடுத்துவர இயலும் என்றால் சரிதான். என்னிடம் காடடப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் சிண்டிகேட் வங்கியால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் பணமாக்க எங்கள் வங்கிக்கு வந்தபோது Account Dormant எங்கள் வங்கியால் திருப்பப்பட்ட ஆவணம் தான் என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். எங்கள் வங்கியில் கணக்கு வைத்திருக்கும் ஒரு நபர் கணக்கை முடிக்கவேண்டும் என்றால் எங்கள் வங்கியால் வழங்கப்பட்ட காசோலையை திரும்ப ஒப்படைத்தால் மட்டுமே கணக்கை முடிப்போம் என்றால் சரிதான். சாந்தகுமார் அவரின் கணக்கை முடித்துக்கொள்வதாக தெரிவித்து கொடுத்த ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. காசோலை எண் 879091 லிருந்து 879100 எண் கொண்ட காசோலைகள் சாந்தகுமார் என்பவருக்கு எங்கள் வங்கியிலிருந்து வழஙகப்பட்டுள்ளது. சாந்தகுமார் வேறு எண்கள் கொண்ட கசோலைகள் வழங்கப்பட்டுள்ளதா என்றால் அதற்கான ஆவணங்கள் எடுத்துவரவில்லை. சாந்தகுமார் எங்கள் வங்கியில் காசோலை கொடுத்தால் பணமாக்க வேண்டாம் என்பதற்காக கடிதம் கொடுத்துள்ளாரா என்றால் பலமுறை கொடுத்துள்ளார். காசோலை எண்.879097 என்ற எண் கொண்ட காசோலையை பணமாக்க வேண்டாம் என கடிதம் கொடுத்துள்ளாரா என்றால் அதற்கான ஆவணத்தை பார்த்தால் தான் தெரியும். எனக்கு வந்த சம்மனில் சாந்தகுமார் பணமாக்க வேண்டாம் என கொடுத்த கடிதங்களை எடுத்து வந்து சாட்சியமளிக்க வேண்டும் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். Account Dormant என்பதும் Account closed என்பதும் வெவ்வேறானது என்றால் சரிதான்.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.